1978 ஆகஸ்ட் 31] [டாக்டர் கே. சமரசம்]

கிறது. பால்வளப் பெருக்கம், அதனல் பல லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும். மேலும், பால் பவுடர், வெண்ணை தயாரிப்பு போன்ற திட்டங்கள் பாங்கான தமிழக அரசின் சிறப்புத் திட்டங்களாகும். மழை வளம் காண, மன வளம் சிறக்க, வன வளம் பெருக மூன்று கோடி ரூபாயில் கடலோரப் பகுதிகளில் காடு வளர்ப்புத் திட்டம், கன்னித் தமிழகத்தின் பாதுகாப்புத் திட்டம் ஆகும்.

வேலை வாய்ப்பு நாட்டிலே பெருக, கிராமங்கள் நகரங்கள் என்ற நிலை மாற கதர், கிராமத் கைத்தொழில்களை இரண்டாகப் பிரித்து, அதற்கு இதமான கொள்கையமைத்து தனியாக அமைப்பது தர்மத்தைப் போற்றும் தமிழகத்தின் வெற்றியாகும். பட்டுத் தொழில் பெருக, சிறு தொழில் வளர சீரான திட்டங்கள் பலவும் உண்டு. . . .

ஒழுங்கு பிரச்சினைகள்—தொடர்ச்சி

(ஆ) உறுப்பினர் தம் உரையை எழுதிவைத்து படிப்பது குறித்து.

திரு. மு. அரங்கநாதன்: தலைவரவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சினை; உறுப்பினர் அவர்கள் எழுதிவைத்துப் படிக்கின்றார். அது அனுமதிக்கப்படுகின்றதா?

டாக்டர் கே. சமரசம்: இது யாரோ சொல்லி, எழுதி வைத்துப் படிப்பதல்ல. நானே குறிப்பு எழுதி, படிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் தானே எழுதி வைத்துப் படித்தாலும் அனுமதி பெற்றுத்தான் படிக்கவேண்டும். அனுமதி தருகிறேன். படியுங்கள்.

(திரு. என். கிட்டப்பா பேச முற்படுதல்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே பிரச்னை ஏதாவது இருக்குமானல் நான் தலையிடுகிறேன். இது நமது மரபுக்குப் புறம்பானதாக இருக்குமானல், படிக்கக் கூடாதுதான்.

திரு என். கிட்டப்பா: நான் ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். எனக்கும இது பொருந்துமா? எல்லோருக்கு பொருந்துமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் என்ன சொல்கிறேன் என்றால், பத்திரிகைக் குறிப்பை ஆதாரமாக வைத்துப் பேசுகிறபோது, அனுமதியில்லாமல் படிக்கக் கூடாது. பொதுவாக எதையுமே பார்த்துப் படிக்கக் கூடாதுதான். ஆனல், இதிலே பாதியைப் படித்துவிட்டு பிறகு, பிரச்னை கிளப்பப்படு

கிறது. உறுப்பினர் இந்தப் பிரச்னையை எழுப்பிய பிறகுதான், எனக்கே இது தெரிய வருகிறது. அதை நான் பார்த்தேன். ஆகவே, இதிலே ஏதாவது பிரச்னை இருந்தால் நான் தலையிடு கிறேன்.

திரு. மு. கருணாநிதி : அவைத் தலைவர் அவர்கள் மிகுந்த எச்சரிக்கையோடு ஒரு விளக்கத்தை அளித்திருக்கிறார்கள். பாதி படித்த பிறகு அனுமதிக்கலாம், பிரச்சினை வந்தால் அனுமதிக்க மாட்டேன், என்று கூறியிருக்கிறார்கள். அதைப் போல் எதிர்க் கட்சி வரிசையிலிருந்து படிக்கும் போது உடனே பிரச்சினை வந்து விட்டால் அனுமதிக்காமல் இருந்து விடக் கூடாது. எல்லோரும் படிக்கலாம் என்ற பொதுவான நியாயத்தை வழங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரும்போது உறுப்பினர் அவர்கள் பாதி வரை படித்து விட்டார்கள். என்னுடைய அனுமதி பெற்றுத்தான் அவர் படித்திருக்க வேண்டும். பாதி படித்த பிறகு தான் உறுப்பினர்களின் கவனமே அவர் பால் சென்றது. இப்போதும் அவரை குறிப்புகளை வைத்துப் பேசச் சொல்லுகிறேன். ஆனால் இந்த அவைக்கோ, அவையின் மரபுக்கோ புறம்பான வார்த்தைகள், தவறான வாசகங்கள் வருமானால் தலையிட்டு நீக்கத் தயாராக இருக்கிறேன். ஆயினும் அவர் அனுமதி பெற்றுத்தான் படித்திருக்கவேண்டும்.

திரு. மு. கருணாநிதி : வார்த்தைகள் தவறாக வந்துவிட கூடாது என்பதற்காகத்தான் எழுதி வைத்துக் கொண்டு படிக்கிறார். அதைப் போல் எல்லோரும் படிக்க அனுமதி அளிக்கப் படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுவாக, உறுப்பினர்கள் எழுதிப் படிக்கக் கூடாது. அவ்வாறு உறுப்பினர் அவர்கள் எழுதிப் படித்திருந்தால் இனி எழுதி வைத்துக் கொண்டு படிக்கக் கூடாது என்று தீர்ப்பளிக்கிறேன். குறிப்புகள் இருந்தால் அதை வைத்துக் கொண்டு பேசலாமே தவிர, எழுதி வைத்துக் கொண்டு படிக்கக் கூடாது.

(9) ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி).

டாக்டர் கே. சமரசம் : இல்லாத ஒன்றை இது வரை விவாதப் பொருளாக ஆக்கியதற்காக உண்மையிலேயே வெட்கப் படுகிறேன். நான் பேசுகின்ற வார்த்தைகள் முழுமையாக எழுதி வைக்கப்படவில்லை. நான் பேசுகின்ற பேச்சு முழுவதும் அப்படியே இதில் இல்லை. குறிப்பை வைத்துக் கொண்டுதான் பேசுகிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எதிர்கட்சித் தலைவர்களுக்கும் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.